Save & Print

Roll No:
Application No:
Name:
Exam Date: **08-Oct-2020**
Exam Time: **09:00-12:00**
Examination: **1. Course Code - M.Phil.**
**2. Field of Study - Tamil (TAMP)**

Registered Photo Exam Day Photo

**SECTION 1 - SECTION 1**

**Question No.1 (Question Id - 9)**
நாலடியாரில் கூறியபடி, ஐம்பொறிகளின் வரிசைமுறை__________.

(a) வாய்

(b) மூக்கு

(c) கண்

(d) செவி

(e) மெய்

(A) (a), (e), (b), (c), (d)
(B) (e), (a), (c), (b), (d) (Correct Answer)
(C) (a), (c), (b), (e), (d)
(D) (d), (c), (e), (b), (a)

**Question No.2 (Question Id - 62)**
கீழ்வரும் புறக்கவிதையைப் படித்து விடைதருக

களம்புக லோம்புமின் தெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைக
லெண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே

இக்கவிதையில் இடம்பெற்றுள்ள "திங்கள் வலித்த கால்" என்பது __________.

(A) திங்கள் கிழமை சென்ற வழி
(B) நிலவை நோக்கிய பயணம்
(C) ஒரு மாதமாய் இழைத்த ஆரக்கால் (Correct Answer)
(D) திங்கள் கிழமை இழைத்த ஆரக்கால்

**Question No.3 (Question Id - 52)**
பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | திருத்தொண்டர் காப்பியம் | (i) | நிர்மலா சுரேஷ் |
| (b) | இயேசு காவியம் | (ii) | வலம்புரிஜான் |
| (c) | அம்மா அழைப்பு | (iii) | கண்ணதாசன் |
| (d) | இயேசு மகாகாவியம் | (iv) | சூ. இன்னாசி |

(A) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
(B) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
(C) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i) (Correct Answer)

**Question No.4 (Question Id - 23)**
**உறுதிக்கூற்று (உ) :**

கோவலன் திங்கள் முகத்தாள் கண்ணகியின் கவவுக்கை ஞெகிழ்ந்தனன்.

**காரணம் (கா) :**

யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உருத்தது.

(A) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) ○ **(உ)** சரி, **(கா)** சரி

(C) ○ **(உ) சரியன்று, (கா) சரி (Correct Answer)**

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.5 (Question Id - 22)**

**உறுதிக்கூற்று (உ) :**

செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறல் வேண்டும்.

**காரணம் (கா) :**

ஆக்கச்சொல் காரணத்தை முன்வைத்துச் சொல்லுதற்குரியது.

(A) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

(C) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.6 (Question Id - 27)**

**கூற்று 1 :**

உழிஞைத்திணை முல்லைக்குப் புறனாக அமையும்.

**கூற்று 2 :**

அது முழுமுதல் அரணம் முற்றலும் கோடலுமாக அமையும்.

(A) ○ இரு கூற்றுகளும் சரி.

(B) ○ இரு கூற்றுகளும் தவறு.

(C) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு.

(D) ○ **கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி. (Correct Answer)**

**Question No.7 (Question Id - 45)**

**கூற்று 1 :**

ஒரு பொருளைக் குறிப்பினால் மறுப்பது 'முன்னவிலக்கணி' எனப்படும்.

**கூற்று 2 :**

முன்ன விலக்கணியின் வேறுபெயர் 'உள்ளுறை உவமம்' என்பதாகும்.

(A) ○ **கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு (Correct Answer)**

(B) ○ இரு கூற்றுகளும் தவறு

(C) ○ இரு கூற்றுகளும் சரி

(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி

**Question No.8 (Question Id - 13)**

அரசர்-புலவர் என்ற நண்பர் இணைகளுள் சரியானவை

(a) பாரி - கபிலர்

(b) அதியமான் நெடுமான் அஞ்சி - ஔவையார்

(c) கோப்பெருஞ்சோழன் - கோவூர்கிழார்

(d) குமணன் – பெருஞ்சித்திரனார்

(A) ○ (a), (b), (d) மட்டும் (Correct Answer)

(B) ○ (b), (c), (d) மட்டும்

(C) ○ (a), (c), (d) மட்டும்

(D) ○ (a), (c) மட்டும்

**Question No.9 (Question Id - 80)**

**கூற்று 1 :**

ஒப்பிலக்கியக் கோட்பாட்டில் தாக்கம் ஒரு காரணியாக மட்டுமே இருக்க முடியும் என்பர் அமெரிக்க அறிஞர்.

**கூற்று 2 :**

அதிகாரம் என்பது அறிவு என்ற அமைப்பின் செயல்பாடுகளால் வருவது என்கிறார் ஃபூக்கோ.

(A) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு

(B) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி

(C) ○ இரு கூற்றுகளும் தவறு

(D) ○ இரு கூற்றுகளும் சரி (Correct Answer)

**Question No.10 (Question Id - 19)**

‘நாடுரி’ என்னும் சொல்லின் பெயர் வகைமை __________.

(A) ○ நிறைப்பெயர்

(B) ○ எண்ணுப்பெயர்

(C) ○ அளவுப்பெயர் (Correct Answer)

(D) ○ திசைப்பெயர்

**Question No.11 (Question Id - 7)**

“திறம் தெரிந்து தேறப்படும்” பொருள்வகையின் வரிசை முறை __________.

(a) உயிரச்சம்

(b) இன்பம்

(c) பொருள்

(d) அறம்

(A) ○ (a), (b), (c), (d)

(B) ○ (b), (a), (c), (d)

(C) ○ (b), (a), (d), (c)

(D) ○ (d), (c), (b), (a) (Correct Answer)

**Question No.12 (Question Id - 25)**

சூளாமணியின் சருக்கங்களின் வரிசை முறை __________.

(a) துறவுச்சருக்கம்

(b) சுயம்வரச்சருக்கம்

(c) அரசியற்சருக்கம்

(d) முத்திச்சருக்கம்

(e) கல்யாணச்சருக்கம்

(A) ○ **(e), (c), (b), (a), (d) (Correct Answer)**
(B) ○ (b), (e), (c), (a), (d)
(C) ○ (b), (e), (a), (d), (c)
(D) ○ (e), (c), (d), (a), (b)

**Question No.13 (Question Id - 20)**
வளையாபதி வலியுறுத்தும் சமயம் _________.

(A) ○ **சமணம் (Correct Answer)**

(B) ○ பௌத்தம்

(C) ○ சைவம்

(D) ○ வைணவம்

**Question No.14 (Question Id - 35)**
சீவகன், மகளிரை மணக்கக் காரணமான நிகழ்வுகளைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குணமாலையார் | (i) | பாம்பு கடித்த விடம் போக்குதல் |
| (b) | பதுமையார் | (ii) | பழஞ்சரக்கு எல்லாம் விற்று முதலாதல் |
| (c) | விமலையார் | (iii) | தேவகானம் பாடுதல் |
| (d) | சுரமஞ்சரியார் | (iv) | அசனிவேகத்தை அடக்குதல் |

(A) ○ (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
(B) ○ **(a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii) (Correct Answer)**
(C) ○ (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

**Question No.15 (Question Id - 12)**
**கூற்று 1 :**

கைக்கிளை, பெருந்திணை பற்றிக் கிளக்கும் கவிதைகள் கலித்தொகையில் காணப்படுகின்றன.

**கூற்று 2 :**

கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நடுநாயகமாக விளங்குவதால் பாலைத்திணை ‘நடுவண் ஐந்திணை’ எனப்படுகிறது.

(A) ○ இரு கூற்றுகளும் சரி.

(B) ○ இரு கூற்றுகளும் தவறு.

(C) ○ **கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு. (Correct Answer)**

(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.16 (Question Id - 96)**
தமிழகத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள்:சரியான இணை_________.

(A) ○ **கீழடி, அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர். (Correct Answer)**

(B) ○ கீழடி, சித்தன்னவாசல் , ஆதிச்சநல்லூர்.

(C) ○ அரிக்கமேடு, சித்தன்னவாசல், ஆதிச்சநல்லூர்.

(D) ○ மாங்குளம், சித்தன்னவாசல், கொடுமணல்.

**Question No.17 (Question Id - 21)**

"இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி" எனக் கண்ணகியைப் புகழ்ந்தவர் ________.

(A) ○ கோவலன்

(B) ○ கவுந்தியடிகள்

(C) ○ **சாலினி (Correct Answer)**

(D) ○ மாதரி

**Question No.18 (Question Id - 40)**

**உறுதிக்கூற்று (உ) :**

சங்கீரண அணிக்கு விரவணி என வேறுபெயர் உண்டு.

**காரணம் (கா) :**

பல அணிகள் ஒரு பாட்டில் கலந்து வருவது அது.

(A) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

(B) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று

(C) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

**Question No.19 (Question Id - 76)**

**உறுதிக்கூற்று (உ) :**

பெண் என்ற குறிப்பானுக்கும் அது குறிக்கும் பெண்ணாகிய குறிப்பீட்டிற்கும் எந்தவிதமான காரணகாரியத் தொடர்பும் இல்லை.

**காரணம் (கா) :**

மொழியில் வந்துசேரும் பண்பாட்டுக் கூறுகளால் மனிதர்களின் மனஅமைப்பிலும் ஆண்-பெண் குறித்த கருத்தாக்கங்கள் வந்து படிகின்றன.

(A) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(C) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

**Question No.20 (Question Id - 32)**

வழக்கில் உள்ளதால் நீக்கப்படா எனத் தொல்காப்பியர் சுட்டும் பெயர்மரபு இணைகள்__________.

(a) குரங்கின் ஏறு - கடுவன்

(b) கூகை - கோட்டான்

(c) கிளி - தத்தை

(d) வெருகு - கண்டி

(A) ○ **(a), (b), (c) மட்டும் (Correct Answer)**

(B) ○ (a), (b), (d) மட்டும்

(C) ○ (b), (c), (d) மட்டும்

(D) ○

(a), (c), (d) மட்டும்

**Question No.21 (Question Id - 74)**
பிரபந்த மரபியல் வரையறுக்கும் சிற்றிலக்கிய வகை எண்ணிக்கை __________.

(A) 108
(B) **96 (Correct Answer)**
(C) 124
(D) 98

**Question No.22 (Question Id - 98)**
காலமும் இலக்கிய வகையும்:பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நாயக்கர் | (i) | காப்பிய இலக்கியம் |
| (b) | ஐரோப்பியர் | (ii) | பக்தி இலக்கியம் |
| (c) | சோழர் | (iii) | நவீன இலக்கியம் |
| (d) | பல்லவர் | (iv) | சிற்றிலக்கியம் |

(A) **(a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii) (Correct Answer)**
(B) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(C) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
(D) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

**Question No.23 (Question Id - 56)**
'அஞ்ஞாடி' என்பது __________.

(A) சோ. தர்மன் எழுதிய புதினங்களுள் அஞ்ஞையரை முன்வைத்த ஒன்று
(B) பா. செயப்பிரகாசம் என்பார் கரிசல்காட்டு மனிதர்கள் பற்றி எழுதிய கட்டுரைத் தொகுதி
(C) கி. ராஜநாராயணன் கரிசல் கதைசொல்லிகளை வியந்து எழுதிய கட்டுரைத் தொகுதி
(D) **கரிசல் பகுதி ஒடுக்கப்பட்டோரைக் குறித்துப் பூமணி எழுதிய புதினங்களுள் ஒன்று (Correct Answer)**

**Question No.24 (Question Id - 92)**
**கூற்று 1 :**

MLA style – என்பது கலைப்புல ஆய்வுக்குரிய ஆய்வு நெறிமுறைக் கையேடு.

**கூற்று 2 :**

இந்த நெறிமுறை, Modern Languages Association – எனும் அமைப்பால் உருவாக்கப்பெற்றது.

(A) இரு கூற்றுகளும் தவறு.
(B) **இரு கூற்றுகளும் சரி. (Correct Answer)**
(C) கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு.
(D) கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.25 (Question Id - 81)**
ஒத்த ஆய்வு முறையினர்: நிரல் படுத்துக.

(A) தொ.மு.சி. ரகுநாதன், க.நா.சு., வெங்கட்சாமிநாதன், க. கைலாசபதி
(B) கோ. கேசவன், டி.கே.சி, பெ. மாதையன், கா. சிவத்தம்பி
(C) க.நா.சு., கோவை ஞானி, க. கைலாசபதி, தொ.மு.சி. ரகுநாதன்
(D)

க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, நா.வானமாமலை, தொ.மு.சி. ரகுநாதன் (Correct Answer)

**Question No.26 (Question Id - 54)**

'பூரு வம்சம்' என்ற கதைத்தொகுதி

(A) மகாபாரதத்தை அடியொற்றி இராஜாஜி எழுதியது

(B) இராமாயணத்தை அடியொற்றி இராஜாஜி எழுதியது

(C) **மகாபாரதத்தை அடியொற்றி அருணன் எழுதியது (Correct Answer)**

(D) இராமாயணத்தை அடியொற்றிக் கோணங்கி எழுதியது

**Question No.27 (Question Id - 77)**

**உறுதிக்கூற்று (உ) :**

தாளிகைகள் என்பன புதினங்கள்.

**காரணம் (கா) :**

சமூகச் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டவை.

(A) **(உ) சரியன்று, (கா) சரியன்று (Correct Answer)**

(B) **(உ)** சரி, **(கா)** சரி

(C) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(D) **(உ)** சரி, **(கா)** சரியன்று

**Question No.28 (Question Id - 36)**

ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களுள் ஒருவர் __________.

(A) **சேந்தனார் (Correct Answer)**

(B) பட்டினத்தார்

(C) காரைக்கால் அம்மையார்

(D) அதிராவடிகள்

**Question No.29 (Question Id - 86)**

**உறுதிக்கூற்று (உ) :**

கருதுகோள் இன்றி ஆய்வுரை எழுத இயலாது.

**காரணம் (கா) :**

கருதுகோள்தான் ஆய்வு நோக்கத்தை உருவாக்குகிறது.

(A) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(C) **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

(D) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.30 (Question Id - 63)**

**கூற்று 1 :**

'அர்ச்சுனன் தபசு' - கூத்துப்பட்டறை முத்துசாமி எழுதி இயக்கிய நாடகம்.

**கூற்று 2 :**

'அர்ச்சுனன் தபசு' - பாரதிபுத்திரனின் மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றிய ஆய்வு.

(A) ○ **இரு கூற்றுகளும் சரி (Correct Answer)**

(B) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு

(C) ○ இரு கூற்றுகளும் தவறு

(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி

**Question No.31 (Question Id - 67)**

தவறான இணை__________.

(A) ○ செவ்வாழை – அண்ணாதுரை

(B) ○ ஞாநி – பரிக்ஷா

(C) ○ **தண்ணீர் – கோமல் சுவாமிநாதன் (Correct Answer)**

(D) ○ கே.ஏ. குணசேகரன் – பலியாடுகள்

**Question No.32 (Question Id - 100)**

ஆய்வேட்டு அமைப்பு முறை:பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நன்றியுரைக்கு முன்னர் அமைவது | (i) | பின்னிணைப்பு |
| (b) | நிறைவுரைக்குப் பின்னர் அமைவது | (ii) | சான்றெண் விளக்கம் |
| (c) | ஆய்வேட்டின் இறுதியில் அமைவது | (iii) | சான்றிதழ்கள் |
| (d) | இயல்களின் இறுதியில் அமைவது | (iv) | துணைநூற்பட்டியல் |

(A) ○ (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)

(B) ○ (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

(C) ○ **(a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii) (Correct Answer)**

(D) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

**Question No.33 (Question Id - 87)**

**உறுதிக்கூற்று (உ) :**

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை திருந்திய திராவிட மொழிகள் .

**காரணம் (கா) :**

இந்த நான்கு மொழிகளும் எழுத்திலக்கிய வளம் பெற்றவை.

(A) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

(C) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.34 (Question Id - 58)**

**உறுதிக்கூற்று (உ) :**

'சூடிய பூ சூடற்க' என்பது ஆண்டாள் பாசுரத்தின் புகழ்மிக்க அடி.

**காரணம் (கா) :**

ஆண்டாள் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்று அழைக்கப்பட்டாள்.

(A) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) ○ **(உ) சரியன்று, (கா) சரி (Correct Answer)**

(C) ○ **(உ)** சரி, **(கா)** சரி

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.35 (Question Id - 53)**
பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | உமறுப்புலவர் | (i) | சீதக்காதிக்கோவை |
| (b) | குணங்குடி மஸ்தான் | (ii) | தீன் விளக்கம் |
| (c) | வண்ணக்களஞ்சியப் புலவர் | (iii) | குத்பு நாயகம் |
| (d) | சேகனாப்புலவர் | (iv) | ஆனந்தக் களிப்பு |

(A) ○ **(a)-(i), (b)-(iv), (c)-(ii), (d)-(iii) (Correct Answer)**
(B) ○ (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(C) ○ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(D) ○ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

**Question No.36 (Question Id - 94)**
**கூற்று 1 :**
திராவிட மொழிகளில் ‘தமிழ்’ வளமான மொழி.

**கூற்று 2 :**

தமிழ், தொன்மையான இலக்கண இலக்கியங்களைக் கொண்ட மொழி.

(A) ○ இரு கூற்றுகளும் தவறு.
(B) ○ **இரு கூற்றுகளும் சரி. (Correct Answer)**
(C) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு.
(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.37 (Question Id - 57)**
**உறுதிக்கூற்று (உ) :**
ந. முத்துசாமி கூத்துப்பட்டறை அமைப்பைத் தொடங்கினார்.

**காரணம் (கா) :**

தமிழகக் கூத்துக்கலைகள் அழியத்தொடங்கின.

(A) ○ **(உ)** சரி, **(கா)** சரி
(B) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று
(C) ○ **(உ) சரி, (கா) சரியன்று (Correct Answer)**
(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

**Question No.38 (Question Id - 79)**
இசங்களின் காலவரிசை – நிரல்படுத்துக.
(A) ○ **செவ்வியல், புனைவியல், அமைப்பியல், பின்நவீனத்துவம் (Correct Answer)**
(B) ○ அமைப்பியல், பின்நவீனத்துவம், புனைவியல், செவ்வியல்
(C) ○ பின்நவீனத்துவம், புனைவியல், செவ்வியல், அமைப்பியல்
(D) ○ புனைவியல், பின்நவீனத்துவம், செவ்வியல், அமைப்பியல்

**Question No.39 (Question Id - 91)**
நிரல்படுத்துக : ஆய்வுரைப் படிநிலை.
(a) கருதுகோளாக்கம்
(b) முன்னாய்வு அறிதல்
(c) ஆய்வுச்சுருக்கம் எழுதுதல்
(d) ஆய்வறிக்கை எழுதுதல்

(A) ○ (b), (c), (d), (a)
(B) ○ **(b), (a), (c), (d) (Correct Answer)**
(C) ○ (c), (d), (b), (a)
(D) ○ (a), (b), (c), (d)

**Question No.40 (Question Id - 68)**
சரியான இணை__________.
(A) ○ சுகுணவிலாச சபை - டி.கே.எஸ். சகோதரர்கள்
(B) ○ **சுகுணவிலாச சபை - பம்மல் சம்பந்த முதலியார் (Correct Answer)**
(C) ○ சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப்பள்ளி - மு. இராமசாமி
(D) ○ சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப்பள்ளி - செ. ரவீந்திரன்

**Question No.41 (Question Id - 33)**
மெய்ப்பாடு – அதன் நிலைக்களன்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நகை | (i) | மூப்பு |
| (b) | அழுகை | (ii) | இளமை |
| (c) | இளிவரல் | (iii) | புதுமை |
| (d) | மருட்கை | (iv) | இளிவு |

(A) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
(B) ○ (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)
(C) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
(D) ○ **(a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii) (Correct Answer)**

**Question No.42 (Question Id - 16)**
கவிதை அடியையும் நூலையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும் | (i) | திருக்குறள் |
| (b) | அகநக நட்பது நட்பு | (ii) | பழமொழி |
| (c) | செத்தாரைச் சாவார் சுமந்து | (iii) | நான்மணிக்கடிகை |
| (d) | குன்றின் மேலிட்ட விளக்கு | (iv) | நாலடியார் |

(A) ○ (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(B) ○ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(C) ○ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(D) ○ **(a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii) (Correct Answer)**

**Question No.43 (Question Id - 60)**
இலக்கிய இதழ்கள் : காலவரிசையில் நிரல்படுத்துக.
(A) ○ வானம்பாடி, எழுத்து, காலச்சுவடு, நிகழ், மணிக்கொடி
(B) ○ காலச்சுவடு, மணிக்கொடி, நிகழ், வானம்பாடி, எழுத்து
(C) ○ வானம்பாடி, எழுத்து, காலச்சுவடு, மணிக்கொடி, நிகழ்
(D) ○ **மணிக்கொடி, எழுத்து, வானம்பாடி, நிகழ், காலச்சுவடு (Correct Answer)**

**Question No.44 (Question Id - 82)**
பொருத்துக – திறனாய்வும் திறனாய்வாளர்களும்

| | | | |
|---|---|---|---|
| (a) | இடிபஸ் சிக்கல் | (i) | எட்வர்ட் சையத் |
| (b) | இயங்கியல் பொருள்முதல்வாதம் | (ii) | ஹெகல் |
| (c) | கருத்துமுதல் வாதம் | (iii) | காரல் மார்க்ஸ் |
| (d) | விளிம்புநிலை ஆய்வு | (iv) | சிக்மண்ட் ஃபிராய்ட் |

(A) ○ (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(B) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
(C) ○ **(a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i) (Correct Answer)**
(D) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

**Question No.45 (Question Id - 5)**
**உறுதிக்கூற்று (உ) :**

“மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை” என்கிறது முதுமொழிக்காஞ்சி.

**காரணம் (கா) :**

கற்றதை மறவாதிருக்கின்றவனே மேதை ஆவான்.

(A) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**
(B) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி
(C) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று
(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.46 (Question Id - 29)**
**கூற்று 1 :**

குண்டலகேசி என்னும் பெருங்காப்பியமே நீலகேசி தோன்றுவதற்குக் காரணம்.

**கூற்று 2 :**

நீலகேசி சமணசமயக் கருத்துக்களைப் பரப்பும் நோக்கில் எழுதப்பட்டது.

(A) ○ **இரு கூற்றுகளும் சரி. (Correct Answer)**
(B) ○ இரு கூற்றுகளும் தவறு.
(C) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு.
(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.47 (Question Id - 75)**
**உறுதிக்கூற்று (உ) :**

ஒலிமுதல்வாதம் குறைபாடுடையது எனத் தெரிதா கூறுகிறார்.

**காரணம் (கா) :**

மொழிக்கு மிகவும் அடிப்படையாக இருப்பது எழுத்துதான்.

(A) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று
(B) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று
(C) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி
(D) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

**Question No.48 (Question Id - 65)**
**கூற்று 1 :**

‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’ என்ற சிறுகதை சி.எஸ். லஷ்மி என்ற இயற்பெயர் கொண்டவர் எழுதியது.

**கூற்று 2 :**

வரலாற்று ஆய்வாளரான 'அம்பை' 1976 முதல் சிறுகதைகள் எழுதிவருகிறார்.

(A) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு

(B) ○ **இரு கூற்றுகளும் சரி (Correct Answer)**

(C) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி

(D) ○ இரு கூற்றுகளும் தவறு

**Question No.49 (Question Id - 90)**

நிரல்படுத்துக : அரசர்களின் காலவரிசை.

(a) உத்தமசோழன்

(b) இராசராசன்

(c) இராசேந்திரன்

(d) வீரசோழன்

(A) ○ (b), (c), (d), (a)

(B) ○ (c), (d), (b), (a)

(C) ○ (b), (d), (a), (c)

(D) ○ **(a), (b), (c), (d) (Correct Answer)**

**Question No.50 (Question Id - 83)**

தவறான மொழியாக்கம் __________.

(A) ○ **சான்றெண் அளிப்பு - Quotation (Correct Answer)**

(B) ○ சுருக்க விளக்கம் - Abbreviation

(C) ○ கருதுகோள் - Hypothesis

(D) ○ அடிக்குறிப்பு - Foot Note

**Question No.51 (Question Id - 69)**

பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | இந்திரா பார்த்தசாரதி | (i) | ஏசுவின் தோழர்கள் |
| (b) | தமிழவன் | (ii) | வார்சாவில் ஒரு கடவுள் |
| (c) | ச.பாலமுருகன் | (iii) | சோளகர் தொட்டி |
| (d) | முத்துநாகு | (iv) | சுளுந்தீ |

(A) ○ (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(B) ○ (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)

(C) ○ **(a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv) (Correct Answer)**

(D) ○ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

**Question No.52 (Question Id - 84)**

சான்றெண் அளிப்பில் இரட்டை மேற்கோளுக்குள் அமையவேண்டியது __________.

(A) ○ **கட்டுரைப்பெயர் (Correct Answer)**

(B) ○ நூற்பெயர்

(C) ○ நூலாசிரியர் பெயர்

(D) ○ பதிப்பகப்பெயர்

**Question No.53 (Question Id - 14)**

நிலம்-மக்கள் என்ற இணைகளுள் சரியானவை

(a) குறிஞ்சி - குறவர்

(b) முல்லை - பரதவர்

(c) மருதம் - களமர்

(d) நெய்தல் - எயினர்

(A) ○ (a), (b) மட்டும்

(B) ○ (b), (c) மட்டும்

(C) ○ **(a), (c) மட்டும் (Correct Answer)**

(D) ○ (a), (d) மட்டும்

**Question No.54 (Question Id - 8)**

தொல்காப்பியர் கூற்றுப்படி, நானிலங்களின் வரிசைமுறை __________.

(a) குறிஞ்சி

(b) முல்லை

(c) மருதம்

(d) நெய்தல்

(A) ○ (a), (b), (c), (d)

(B) ○ **(b), (a), (c), (d) (Correct Answer)**

(C) ○ (b), (a), (d), (c)

(D) ○ (d), (c), (b), (a)

**Question No.55 (Question Id - 43)**

பக்திநிலையின் படிநிலைகள் : நிரல் படுத்துக.

(A) ○ கிரியை, யோகம், ஞானம், சரியை

(B) ○ ஞானம், யோகம், சரியை, கிரியை

(C) ○ **சரியை, கிரியை, யோகம், ஞானம் (Correct Answer)**

(D) ○ யோகம், சரியை, கிரியை, ஞானம்

**Question No.56 (Question Id - 93)**

**கூற்று 1 :**

பல்லவர்காலத்தில் புடைப்புச் சிற்பங்கள் பெருவழக்குப் பெற்றன.

**கூற்று 2 :**

பல்லவ மன்னர்கள் சிற்பிகளாகத் திகழ்ந்தனர்.

(A) ○ இரு கூற்றுகளும் சரி.

(B) ○ இரு கூற்றுகளும் தவறு.

(C) ○ **கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு. (Correct Answer)**

(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.57 (Question Id - 15)**

கவிதை அடி - புலவர் என்ற இணைகளுள் சரியானவை

(a) நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர் - கபிலர்

(b) பெரியோரை வியத்தலும் இலமே – கணியன் பூங்குன்றனார்

(c) தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம் நீ – இளம்பெருவழுதியார்

(d) நறியவும் உளவோ நீயறியும் பூவே - இறையனார்

(A) ○ (a), (b), (c) மட்டும்

(B) ○ (b), (c), (d) மட்டும்

(C) ○ **(a), (b), (d) மட்டும் (Correct Answer)**

(D) ○ (a), (b) மட்டும்

**Question No.58 (Question Id - 50)**

தொடர்புடைய இணையைக் கண்டறிக.

(A) ○ **சுகுணசுந்தரி சரித்திரம், பெண்மதிமாலை, சர்வசமய சமரசக் கீர்த்தனை (Correct Answer)**

(B) ○ பெண்மதிமாலை, பரமார்த்த குருகதை, சுகுணசுந்தரி சரித்திரம்

(C) ○ சுகுணசுந்தரி சரித்திரம், பரமார்த்த குருகதை, சர்வசமய சமரசக் கீர்த்தனை

(D) ○ சுகுணசுந்தரி சரித்திரம், ஞானதீபிகை, பரமார்த்த குருகதை

**Question No.59 (Question Id - 55)**

கே. டானியல், செங்கை ஆழியான், அ. முத்துலிங்கம், உருத்திரமூர்த்தி சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன் என்போரின் மிகச்சரியான அடையாளம் _________.

(A) ○ அனைவரும் ஈழத்தமிழ் எழுத்தாளர்கள்

(B) ○ புலம்பெயர் எழுத்தாளர்கள்

(C) ○ மலேசியா, சிங்கப்பூர், இலங்கைத் தமிழ்ப்படைப்பாளிகள்

(D) ○ **புலம்பெயர் மற்றும் ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் (Correct Answer)**

**Question No.60 (Question Id - 37)**

'கிறித்தவத் தேவாரம்' எனப்படுவது _________.

(A) ○ தேம்பாவணி

(B) ○ வேதியர் ஒழுக்கம்

(C) ○ இரட்சணிய யாத்திரிகம்

(D) ○ **இரட்சணிய மனோகரம் (Correct Answer)**

**Question No.61 (Question Id - 1)**

'சங்கம்' என்ற சொல் இடம்பெற்றிருக்கும் நூல்

(A) ○ அகநானூறு

(B) ○ புறநானூறு

(C) ○ **தேவாரம் (Correct Answer)**

(D) ○ திருவாசகம்

**Question No.62 (Question Id - 3)**

"சங்கத்தமிழ் மூன்றும் தா" என வேண்டியவர்

(A) ○ **ஔவையார் (Correct Answer)**

(B) ○ திருஞானசம்பந்தர்

(C) ○ காரைக்கால் அம்மையார்

(D) ○ ஆண்டாள்

**Question No.63 (Question Id - 85)**

அகரவரிசையில் அமைய வேண்டிய பகுதி _________.

(A) ○ சான்றெண் அளிப்பு

○

(B) துணைநூற்பட்டியல் (Correct Answer)

(C) அடிக்குறிப்பு

(D) பின்னிணைப்பு

**Question No.64 (Question Id - 2)**

'கொண்டி மகளிர்' என்னும் சொல்லின் பொருள்

(A) காதற் பரத்தையர்

(B) கணிகையர்

(C) சிறைப்பிடிக்கப்பட்டோர் (Correct Answer)

(D) தேவரடியார்

**Question No.65 (Question Id - 70)**

பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | ஐராவதி கார்வே | (i) | கரைந்த நிழல்கள் |
| (b) | அசோகமித்திரன் | (ii) | யுகசந்தி |
| (c) | அமெரிக்க உளவாளி | (iii) | சுந்தரராமசாமி |
| (d) | நடுநிசி நாய்கள் | (iv) | அ. முத்துலிங்கம் |

(A) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(B) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii) (Correct Answer)

(C) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

**Question No.66 (Question Id - 73)**

ஐம்பெருங்காப்பியம் என்ற சொல்லை முதலில் கையாண்டவர் __________.

(A) மயிலைநாதர் (Correct Answer)

(B) சிவஞான முனிவர்

(C) நச்சினார்க்கினியர்

(D) பேராசிரியர்

**Question No.67 (Question Id - 88)**

**உறுதிக்கூற்று (உ) :**

களப்பிரர் காலம் இருண்டகாலம் அன்று.

**காரணம் (கா) :**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்கமருவிய காலத்தில் இயற்றப் பெற்றுள்ளன.

(A) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(C) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(D) (உ) சரி, (கா) சரி (Correct Answer)

**Question No.68 (Question Id - 39)**

**உறுதிக்கூற்று (உ) :**

நெடில் எதுகை, கடையாகு எதுகைகளுள் ஒன்று.

**காரணம் (கா) :**

அஃது அடிதோறும் இரண்டாமெழுத்து நெடிலாக அமைவதாகும்.

(A)

**(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

(C) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.69 (Question Id - 49)**

சரியான இணையைக் கண்டறிக.

(A) ○ திருச்சந்த விருத்தம் - திருமங்கையாழ்வார்

(B) ○ திருச்சந்த விருத்தம் - நம்மாழ்வார்

(C) ○ **திருச்சந்த விருத்தம் - திருமழிசையாழ்வார் (Correct Answer)**

(D) ○ திருச்சந்த விருத்தம் - பெரியாழ்வார்

**Question No.70 (Question Id - 6)**

**உறுதிக்கூற்று (உ) :**

ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் மாய்ந்த பின்றை அவன் நாட்டில் முல்லையும் பூத்தது.

**காரணம் (கா) :**

இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்.

(A) ○ **(உ) சரி, (கா) சரி (Correct Answer)**

(B) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(C) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

(D) ○ **(உ)** சரி, **(கா)** சரியன்று

**Question No.71 (Question Id - 28)**

**கூற்று 1 :**

பத்தினிப்பெண்டிர் பண்புடன் இடும் பிச்சை ஏற்றல் பெருந்தகவுடையது

**கூற்று 2 :**

பசிப்பிணி அறுகெனக் காயசண்டிகை ஆருயிர் மருந்து போன்ற பிச்சை இட்டனள்.

(A) ○ இரு கூற்றுகளும் சரி.

(B) ○ இரு கூற்றுகளும் தவறு.

(C) ○ **கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு. (Correct Answer)**

(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.72 (Question Id - 71)**

பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | கா. சிவத்தம்பி | (i) | தமிழ் வீரநிலைக்கவிதை |
| (b) | க. கைலாசபதி | (ii) | பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம் |
| (c) | யரோஸ்லாவ் வாசெக் | (iii) | நில அமைப்பும் தமிழ்க்கவிதையும் |
| (d) | தனிநாயக அடிகள் | (iv) | சங்க இலக்கியத்தில் இயற்கைக் குறியீடு |

(A) ○ (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(B) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

(C) ○ (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(D) ○ **(a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii) (Correct Answer)**

**Question No.73 (Question Id - 24)**
மலர்வனம் புக்க காதையில் சுட்டப்பெறும் வனங்களின் வரிசைமுறை.

(a) உய்யானம்

(b) சம்பாதிவனம்

(c) உவவனம்

(d) கவேரவனம்

(e) இலவந்திகைச் சோலை

(A) ○ (e), (b), (a), (d), (c)
(B) ○ (e), (d), (a), (c), (b)
(C) ○ **(e), (a), (b), (d), (c) (Correct Answer)**
(D) ○ (e), (b), (d), (a), (c)

**Question No.74 (Question Id - 46)**
**கூற்று 1 :**

'சகலகலாவல்லி மாலை' குமரகுருபரரால் பாடப்பட்டது.

**கூற்று 2 :**

இந்நூல் மதுரையில் பாடப்பட்டது.

(A) ○ இரு கூற்றுகளும் தவறு
(B) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி
(C) ○ இரு கூற்றுகளும் சரி
(D) ○ **கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு (Correct Answer)**

**Question No.75 (Question Id - 89)**
நிரல்படுத்துக : திராவிடமொழி அறிஞர் காலவரிசை.

(a) எல்லீஸ்

(b) கால்டுவெல்

(c) எமனோ

(d) குமாரசாமி ராஜா

(A) ○ **(a), (b), (c), (d) (Correct Answer)**
(B) ○ (b), (c), (a), (d)
(C) ○ (b), (a), (d), (c)
(D) ○ (c), (d), (a), (b)

**Question No.76 (Question Id - 48)**
சரியான இணையைக் கண்டறிக

(A) ○ **திருத்தொண்டத் தொகை - ஏழாம் திருமுறை (Correct Answer)**
(B) ○ திருத்தாண்டகம் - ஐந்தாம் திருமுறை
(C) ○ திருவிசைப்பா - பதினோராம் திருமுறை
(D) ○ அற்புதத் திருவந்தாதி - ஒன்பதாம் திருமுறை

**Question No.77 (Question Id - 11)**
**கூற்று 1 :**

நான்கு ஒத்த அடிகளால் ஆனது 'நான்மணிக்கடிகை'.

**கூற்று 2 :**

'நான்மணிக்கடிகை' யைக் கணிமேதாவியார் இயற்றினார்.

(A) ○ இரு கூற்றுகளும் சரி.

(B) ○ **இரு கூற்றுகளும் தவறு. (Correct Answer)**

(C) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு.

(D) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.78 (Question Id - 72)**

புதுத்திறனாய்விற்குப் பொருந்தாக் கூறு __________.

(A) ○ கலை கலைக்காகவே

(B) ○ படைப்பை முதன்மைப்படுத்துவது

(C) ○ **அமைப்புருவாக்கத்திற்கு இணைமுரண் அடிப்படை (Correct Answer)**

(D) ○ கவிதை ஒரு தனி உயிரி

**Question No.79 (Question Id - 97)**

சான்றெண் விளக்க விவரங்கள்: சரியான இணை__________.

(A) ○ **ஆசிரியர் பெயர், நூல் பெயர், பக்க எண். (Correct Answer)**

(B) ○ நூல் பெயர், ஆசிரியர் பெயர், பக்க எண்.

(C) ○ ஆசிரியர் பெயர், பதிப்பகப் பெயர், பக்க எண்.

(D) ○ நூல் பெயர், பதிப்பகப் பெயர், பக்க எண்.

**Question No.80 (Question Id - 41)**

**உறுதிக்கூற்று (உ) :**

வைணவ உலகில் இராமனுசரை 'உடையவர்' எனப்போற்றுவர்.

**காரணம் (கா) :**

அவர் ஆண்டாள் திருப்பாவையைக் கொண்டாடினார்.

(A) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(B) ○ **(உ)** சரி, **(கா)** சரி

(C) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

(D) ○ **(உ) சரி, (கா) சரியன்று (Correct Answer)**

**Question No.81 (Question Id - 30)**

உரிச்சொல் பொருண்மை: சரியான இணைகள்__________.

(a) தட - பெருமை

(b) தெவ்வு - வலி

(c) புலம்பு - தனிமை

(d) வாள் - ஒலி

(A) ○ (a), (b) மட்டும்

(B) ○ **(a), (c) மட்டும் (Correct Answer)**

(C) ○ (b), (c) மட்டும்

○

(D) (a), (d) மட்டும்

**Question No.82 (Question Id - 42)**
கலிப்பாவில் உறுப்புகள் அமையும் முறை _________.
(A) சுரிதகம், தரவு, தனிச்சொல், தாழிசை
(B) **தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் (Correct Answer)**
(C) சுரிதகம், தரவு, தாழிசை, தனிச்சொல்
(D) தாழிசை, தரவு, தனிச்சொல், சுரிதகம்

**Question No.83 (Question Id - 61)**
தமிழ்க்கவிஞர் மறைவுகாலப்படி நிரல்படுத்துக.
(A) **பாரதியார், கவிமணி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (Correct Answer)**
(B) பாரதியார், கவிமணி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாரதிதாசன்
(C) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாரதிதாசன், பாரதியார், கவிமணி
(D) பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவிமணி, பாரதியார்

**Question No.84 (Question Id - 47)**
**கூற்று 1 :**
செய்குதம்பிப்பாவலர் சீறாப்புராணத்திற்கு உரையெழுதியுள்ளார்.

**கூற்று 2 :**

இவர் சதாவதானி ஆவார்.

(A) கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு
(B) கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி
(C) **இரு கூற்றுகளும் சரி (Correct Answer)**
(D) இரு கூற்றுகளும் தவறு

**Question No.85 (Question Id - 95)**
நூல் நூலாசிரியர்: சரியான இணை _________.
(A) **அஷ்டாத்தியாயி – பாணினி, தொல்காப்பியம் – தொல்காப்பியர், டி லிங்கா லட்டினா – வரோ. (Correct Answer)**
(B) அஷ்டாத்தியாயி – பாணினி, தொல்காப்பியம் – தொல்காப்பியர், டி லிங்கா லட்டினா – டயோனியஸ்.
(C) அஷ்டாத்தியாயி – டயோனியஸ், தொல்காப்பியம் – தொல்காப்பியர், டி லிங்கா லட்டினா – வரோ.
(D) பாணினியம் – பாணினி, தொல்காப்பியம் – தொல்காப்பியர், டி லிங்கா லட்டினா – டயோனியஸ்.

**Question No.86 (Question Id - 34)**
உதயணகுமாரகாவிய நிகழ்வுகளைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | உஞ்சைக்காண்டம் | (i) | உதயணன் விரிசிகைக்கு மலர்மாலை சூட்டுதல் |
| (b) | இலாவண காண்டம் | (ii) | மிருகாபதியை ஒரு பறவை எடுத்துப்போதல் |
| (c) | மகத காண்டம் | (iii) | மானனீகை பந்தாடுதல் |
| (d) | | (iv) | |

| | | | |
|---|---|---|---|
| | வத்தவ காண்டம் | | உதயணகுமரன் கோசம்பி நகருட் புகுதல் |

(A) ○ (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
(B) ○ (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(C) ○ **(a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii) (Correct Answer)**
(D) ○ (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

**Question No.87 (Question Id - 17)**
நூலையும் புலவரையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஏலாதி | (i) | காரியாசான் |
| (b) | ஆசாரக்கோவை | (ii) | கணிமேதாவியார் |
| (c) | கைந்நிலை | (iii) | பெருவாயின்முள்ளியார் |
| (d) | சிறுபஞ்சமூலம் | (iv) | புல்லங்காடனார் |

(A) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
(B) ○ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(C) ○ **(a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i) (Correct Answer)**
(D) ○ (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

**Question No.88 (Question Id - 99)**
தொடரும் இலக்கண நிலையும்:பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இராமனைப் பார்த்தான் | (i) | மூன்றாம் வேற்றுமை |
| (b) | அவனுக்குக் கொடுத்தேன் | (ii) | இரண்டாம் வேற்றுமை |
| (c) | அறிவால் வென்றான் | (iii) | எழுவாய் வேற்றுமை |
| (d) | முருகன் வந்தான் | (iv) | நான்காம் வேற்றுமை |

(A) ○ (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
(B) ○ (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(C) ○ **(a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii) (Correct Answer)**
(D) ○ (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

**Question No.89 (Question Id - 26)**
தொல்காப்பிய எழுத்ததிகார இயல்களின் வரிசைமுறை __________.

(a) தொகைமரபு

(b) நூன்மரபு

(c) பிறப்பியல்

(d) மொழிமரபு

(e) புணரியல்

(A) ○ (b), (d), (e), (c), (a)
(B) ○ **(b), (d), (c), (e), (a) (Correct Answer)**
(C) ○ (b), (d), (a), (c), (e)
(D) ○ (d), (b), (c), (e), (a)

**Question No.90 (Question Id - 10)**
**கூற்று 1 :**

புறத்திணைகளுள் ஒன்று 'காஞ்சித்திணை'. இது நிலையாமையைக் குறித்துப் பேசும் பொருண்மை ஆகும்.

**கூற்று 2 :**

'காஞ்சி' என்பது மகளிர் இடையில் அணியும் அணிவகைகளுள் ஒன்று.

(A) ○ **இரு கூற்றுகளும் சரி. (Correct Answer)**
(B) ○ இரு கூற்றுகளும் தவறு.
(C) ○

கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு.

(D) கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி.

**Question No.91 (Question Id - 38)**

'படைப்போர்' என்பது

(A) இசுலாமியச் சிற்றிலக்கிய வகை (Correct Answer)

(B) கிறித்தவச் சிற்றிலக்கிய வகை

(C) வைணவச் சிற்றிலக்கிய வகை

(D) சைவச் சிற்றிலக்கிய வகை

**Question No.92 (Question Id - 59)**

**உறுதிக்கூற்று (உ) :**

இயற்கை எய்திய கவிஞர் இன்குலாப் அரசு விருதுகளை எதிர்பாராது அடித்தட்டு மக்களுக்காகத் தொடர்ந்து எழுதிவந்தவர்.

**காரணம் (கா) :**

இன்குலாப் மறைவுக்குப் பின் 'காந்தள் நாட்கள்' கவிதை நூலுக்காகச் சாகித்ய அகாதமி விருது வழங்க முன்வந்தபோது அவரது குடும்பம் ஏற்க மறுத்துவிட்டது.

(A) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(B) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(C) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(D) (உ) சரி, (கா) சரி (Correct Answer)

**Question No.93 (Question Id - 78)**

ஊடக வளர்நிலை – காலவரிசை நிரல்.

(A) முகநூல், புலனம், ஒரு பைசா தமிழன், பிபிசி தமிழோசை

(B) முகநூல், புலனம், பிபிசி தமிழோசை, ஒரு பைசா தமிழன்

(C) புலனம், முகநூல், பிபிசி தமிழோசை, ஒரு பைசா தமிழன்

(D) ஒரு பைசா தமிழன், பிபிசி தமிழோசை, முகநூல், புலனம் (Correct Answer)

**Question No.94 (Question Id - 18)**

நூலையும் புலவரையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | திருமுருகாற்றுப்படை | (i) | பெருங்கௌசிகனார் |
| (b) | சிறுபாணாற்றுப்படை | (ii) | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| (c) | பெரும்பாணாற்றுப்படை | (iii) | நத்தத்தனார் |
| (d) | மலைபடுகடாம் | (iv) | நக்கீரர் |

(A) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i) (Correct Answer)

(B) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

(C) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

**Question No.95 (Question Id - 31)**

இந்திரவிழவூரெடுத்த காதையில் இடம்பெறும் மன்றங்கள் – அவற்றின் செயல்பாடுகள் : சரியான இணைகள்__________.

(a) வெள்ளிடை மன்றம் – கள்வர்தம் தலையில் பொதியை ஏற்றித் தண்டிக்கும்

(b) இலஞ்சி மன்றம் – நஞ்சு உண்டவர் வந்து தொழத் துயர் நீங்கும்

(c) நெடுங்கல் மன்றம் – உடல்குறைபாடுடையோர் தொழ அக்குறை நீங்கும்

(d) பாவை மன்றம் – அரசர் செங்கோல் தவறினால் பாவை கண்ணீர் உகுத்து அழும்

(A) ○ (a), (d) மட்டும் (Correct Answer)

(B) ○ (b), (c) மட்டும்

(C) ○ (b), (d) மட்டும்

(D) ○ (c), (d) மட்டும்

**Question No.96 (Question Id - 51)**

பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | திருவாலங்காடு | (i) | மாணிக்கவாசகர் |
| (b) | திருமுதுகுன்றம் | (ii) | திருநாவுக்கரசர் |
| (c) | திருப்பெருந்துறை | (iii) | காரைக்காலம்மையார் |
| (d) | திருவீழிமிழலை | (iv) | நம்பியாரூரர் |

(A) ○ (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(B) ○ (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)

(C) ○ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii) (Correct Answer)

(D) ○ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

**Question No.97 (Question Id - 66)**

சரியான மூலநூல் -ஆசிரியர் இணை__________.

(A) ○ நிலம் பூத்து மலர்ந்த நாள் – மனோஜ் குரூர் (Correct Answer)

(B) ○ நிலம் பூத்து மலர்ந்த நாள் – கே.வி. ஜெயஸ்ரீ

(C) ○ ஏழாம் உலகம் – எம்.ஜி.சுரேஷ்

(D) ○ சிலந்தி – எஸ்.ராமகிருஷ்ணன்

**Question No.98 (Question Id - 44)**

திருஞானசம்பந்தர் பதிக அமைப்பு: நிரல் படுத்துக.

(A) ○ புறச்சமய மறுப்பு, அடிமுடிதேடல், இராவணன் செருக்கடக்கல், பதிகப்பயன்

(B) ○ இராவணன் செருக்கடக்கல், பதிகப்பயன், புறச்சமய மறுப்பு, அடிமுடிதேடல்

(C) ○ பதிகப்பயன், இராவணன் செருக்கடக்கல், அடிமுடிதேடல், புறச்சமய மறுப்பு

(D) ○ இராவணன் செருக்கடக்கல், அடிமுடிதேடல், புறச்சமய மறுப்பு, பதிகப்பயன் (Correct Answer)

**Question No.99 (Question Id - 4)**

**உறுதிக்கூற்று (உ) :**

நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாகக் குறிப்பிடப் பெறுகிறது.

**காரணம் (கா) :**

நல்ல காதல் ஒழுகலாறுகளை இது செவ்வனே சித்திரிக்கிறது.

(A) ○ (உ) சரி, (கா) சரி (Correct Answer)

(B) ○

**(உ)** சரி, **(கா)** சரியன்று

(C) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரி

(D) ○ **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**Question No.100 (Question Id - 64)**

**கூற்று 1 :**

புதிர வண்ணார்களைப் பற்றி இமையம் புதினம் படைத்துள்ளார்.

**கூற்று 2 :**

பிறமலைக் கள்ளர்களைப் பற்றி சு.வெங்கடேசன் தம் புதினத்தில் விவரித்துள்ளார்.

(A) ○ கூற்று ஒன்று சரி, கூற்று இரண்டு தவறு

(B) ○ கூற்று ஒன்று தவறு, கூற்று இரண்டு சரி

(C) ○ இரு கூற்றுகளும் தவறு

(D) ○ **இரு கூற்றுகளும் சரி (Correct Answer)**

Save & Print